வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 04.07.2026 சனிக்கிழமை இதழ் : 179 பக்கங்கள் : 08

## வவுனியா முதல்வரின் பதவி பறிப்பு; வர்த்தமானிக்கு ஜூலை 15 வரை தடை

வவுனியா, ஜூலை. 04

வவுனியா மாநகர முதல்வர் சு.காண்டீபனை பதவி நீக்கி ஆளுநர் வெளியிட்ட வர்த்தமானிக்கு வவுனியா மேல் நீதிமன்றம் எதிர்வரும் ஜூலை 15 வரை இடைக் கால தடை விதித்துள்ளது.

ஆளுனரின் முடிவினை சவாலுக்குட்படுத்தி மனுதார ரான முதல்வர் காண்டீபன் தொடுத்த வழக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் சார்பில் ஜனாதிபதி சட்ட த்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன், சட்டத்தரணி தயாபரன் ஆகியோர் ஆஜராகினர்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணை களை அடுத்து ஆளுநரின் வர்த்தமானிக்கு ஜூலை 15 வரை தடை மன்று தடை விதித்துள்ளது. (அ)

### தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும்

# சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வே அவசியம்!




### தமிழக முதல்வர் விஜய்யிடம் நேற்று நேரில் வலியுறுத்தியது தமிழ்த் தேசியப் பேரவை

சென்னை, ஜூலை. 04

தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வின் அவசியம் குறித்து, தமிழ்த் தேசியப் பேரவை, தமிழ்நாடு முதலமைச்சரிடம் தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவைக் குழுவினருக்கும், இந்தியா தமிழ்நாடு முதலமைச்சர் யோசப் விஜய்க்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியப் பேரவையினர், நேற்று சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத்தில், முலமைச் சரரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

07

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## குற்றவாளிகளை உடன் கைது செய்யவேண்டும்

### ஹிஸ்புல்லா வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை. 04

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் உள்ள குற்றவாளிகள் எத்தகைய உயரிய அந்தஸ்து, பதவி அல் லது பொருளாதார பலத்தைக் கொண்டிருந்தாலும், அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பி னருமான ஹிஸ்புல்லா வலியுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு காரணமாக முழு நாடும் பேரழிவைச் சந்தித்தது. குறிப்பாக, கிறிஸ்தவ மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, உயிர்களையும் உடமை களையும் இழந்து இன்னும் ஆறாத வடுக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மறுபுறம், இந்தத் தாக்குதலால் முஸ்லிம்

07

## அமைச்சர் விஜித ஹேரத்துடன் ஆனந்தசங்கரி முக்கிய சந்திப்பு!

கொழும்பு, ஜூலை. 04

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்செயலாளரும் மூத்த அரசியல் தலைவருமான வீ. ஆனந்தசங்கரிக்கும், வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விஜித ஹேரத்துக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பாக, அமைச்சர் விஜித ஹேரத் தனது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளப் பக்கத்தில் விடுத்துள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

"இலங்கையின் மூத்த அரசியல் தலைவரும்

07

## கல்வித்துறைக்கே முன்னுரிமை அளிக்கின்றது எங்களின் அரசு!

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை. 04

எமது அரசாங்கம் கல்வித்துறை க்கு முன்னுரிமை அளித்து பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளை முன் னெடுத்து வருகிறது என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித் துள்ளார்.

மாகாணத்திற்கான குறித் தொதுக்கப்பட்ட

07

## முன்னாள் கடற்படை தளபதி கரன்னகொட கைதாகிப் பின்னர் பிணையில் விடுதலை!



கொழும்பு, ஜூலை. 04

முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷவை, கடந்த 2006ஆம் ஆண்டு இலங்கை கடற்படையில் இணைத்துக் கொண்டமை தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னா கொட இலஞ்ச, ஊழல்

07

## சமையல் எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை. 04

லிட்ரோ சமையல் எரி வாயு நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் அதன் விலைகளை குறைக்க தீர் மானித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 300 ரூபாவால் குறைக் கப்பட்டுள்ளது.

07

## உயர் வருமான அந்தஸ்து கிடைத்தாலும், வறுமைக்கோட்டில் வாழ்வோர் 2 மடங்கு!

### ஹர்ஷ டி சில்வா தகவல்

கொழும்பு, ஜூலை. 04

இலங்கை மீண்டும் உலக வங்கியி னால் "உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடு" என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்ப ட்டுள்ளது. எனினும் நாட்டின் எண்களு க்குப் பின்னால் இருக்கும் கசப்பான உண்மை என்னவெனில், நாட்டில் வறு மைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்து ள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

உலக வங்கியின் புதிய வகைப்படுத் தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

07

## கொக்குத்தொடுவாய் உப்பள விவகாரம் அரசாங்க அதிபரிடம் விளக்கம் கோரல்

முல்லைத்தீவு, ஜூலை 04

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று - கொக்குத்தொடு வாய் பகுதியில் அத்து மீறிய முறையில் அமைக்கப்பட்டு வரும் உப்பளத்தை தடுத்துநிறுத்துவது தொட ர்பில் மாவட்ட அரசாங்க அதிபரால் எடுக்கப்பட்ட நடவடி க்கைகள் தொடர் பில் பாராளுமன்ற உறுப்பினர்துரை ராசா ரவிகரன் விளக்கம் கோரியுள்ளார்.

அத்துடன், குறித்த பகுதியில் உள்ள மக்களுக்குச் சொந்தமான காணிகளை எல்லைப்படுத்துவது தொடர்பான தற்போதைய நிலை குறித்தும்

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம், பாராளுமன்ற உறுப்பினர் விளக்கம் கேட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பாராளு மன்ற உறுப்பினரால் உத்தியோக பூர்வ கடிதமொன்று, மாவட்ட அரசாங்க அதிபருக்கு

07

## பூஜித், நிலந்த கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 04

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக் குதலில் பாதிக்கப்பட்டவர்களினால் தம க்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இழப்பீட்டு வழக்குகள், காவல்துறை கட் டளைச் சட்டத்தின்படி காலாவதியாகி விட்டதாகக் கூறி, ஆரம்பத்திலேயே தங் களை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு முன்னாள் காவல்துறை மாஅதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நிலாந்த ஜயவர்தன ஆகியோர் விடுத்த கோரிக்கைகளை நீர்கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் நநேற்று நிராகரித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களினால் நீர்கொ ழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 182 இழப்பீட்டு வழக் குகளை ஆரம்பத்திலேயே தள்ளுபடி செய்யுமாறு பிரதிவாதிகள் தரப்பில் முதற்கட்ட ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டது.

சம்பவம் நடந்து 3 மாதங்க ளுக்குள் வழக்குத் தாக்கல்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபா நட்டம்!

## சம்பந்தப்பட்டவர்கள் சிறைக்குச் செல்வதற்கு தயாராகவேண்டும் என்கிறது விவசாய ஒன்றியம்

கொழும்பு, ஜூலை. 04

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 55 வருட வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 3,000 மில்லியன் ரூபாய் பாரிய நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தக் கொள்முதல் முறைகேடுகளுடன் தொடர்புடையவர்கள் எதிர்காலத்தில் ஆயுள் தண்டனையை எதிர்நோக்க நேரிடும்.

வசந்த சமரசிங்க, நாமல் கருணாரத்ன மற்றும் விவசாய அமைச்சர் உள்ளிட்ட மூன்று அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் ஆகியோர் இந்த கொள்முதல் செயல்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளனர்.

பொதுமக்களின் பணம் இவ்வாறு வீணடிக்கப்பட்டமைக்கு எதிராக, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனுடன் தொடர்புடையவர்கள் ஆயுள் தண்டனை பெற்று சிறை செல்ல நேரிடும் என்பதால் அதற்கு மனதளவில் தயாராக இருக்குமாறும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

திறைசேரியைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, நெல் சந்தைப்படுத்தல் சபையின் வரலாற்றில் இந்த மிகப்பெரிய நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

# 124 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதிக அபாயத்தில்!

கொழும்பு, ஜூலை. 04

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தென்மேற்கு பருவமழை காரணமாக மே, ஜூன், ஜூலை மாதங்களில் டெங்கு பரவல் அதிகரிக்கும் என ஏற்கனவே கணிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு 600 ஆக இருந்த தினசரி நோயாளர்களின் எண்ணிக்கை, தற்போது 1,000 ஐத் தாண்டியுள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நான்கு மடங்கு அதிகமாகும். இந்த ஆண்டில் இதுவரை 56,426 நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இதில் ஜூன் மாதத்தில் மட்டும் 22,000 நோயாளிகளும், மே மாதத்தில் 8,500 நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவரை 35 மரணங்கள் பதிவாகியுள்ளன.

பதிவான நோயாளர்களில் சுமார் 50 வீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

மேலும் காலி, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய பகுதிகளிலும் டெங்கு நோய் வேகமாகப் பரவி வருகிறது.

தற்போது நாடு முழுவதும் 124 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதிக அபாயப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

டெங்கு தொற்றில் நான்கு வகைகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான டெங்கு பரவல் 2017 இல் ஏற்பட்டதுடன், அது டெங்கு தொற்றின் "இரண்டாம் வகை" ஆகும்.

2022 ஆம் ஆண்டிலும், தற்போதைய சூழலிலும் இந்த இரண்டாம் வகை தொற்றே அதிகரித்து காணப்படுகிறது- என்றார். (அ)

# உலகின் சிறந்த சுற்றுலா தீவு நாடாக இலங்கை முதலிடம்!

கொழும்பு, ஜூலை. 04

2026 ஆம் ஆண்டில் உலகளாவிய சுற்றுலா குறித்த கண்ணோட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது

அதன்படி, உலகின் மிகவும் புகழ்பெற்ற தீவுச் சுற்றுலாத் தலங்களின் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இயற்கை அழகு, கலாசாரச் செழுமை, பல்லுயிர் வளம், பயணிகளின் அனுபவம் மற்றும் உலகளாவிய பிரபலத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் தீவுகளை மதிப்பிடும் 'பிக் 7 ட்ரவல்' என்ற அமைப்பின் அண்மைய சர்வதேசப் பயணத் தரவரிசை மூலம் இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

கிரீஸ், போர்த்துக்கல், அயர்லாந்து மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட, உலகளவில் சுற்றுலாத் துறையில் ஆதிக்கம் செலுத்தி வந்த பல தீவு நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி, இலங்கை இப்போது முன்னிலை இடத்தைப் பிடித்துள்ளது.

நீண்ட காலமாக ஐரோப்பிய மற்றும் தென்கிழக்கு ஆசியத் தீவுகள் ஆதிக்கம் செலுத்தி வந்த பாரம்பரியச் சுற்றுலாத் தரவரிசையில், இந்த மாற்றம் ஒரு முக்கியத் திருப்பமாகப் பரவலாகக் கருதப்படுகிறது.

குறைந்த பரப்பளவிற்குள் பல்வேறுபட்ட அனுபவங்களை வழங்கும், கலாசாரச் செழுமை மற்றும் இயற்கை சார்ந்த சுற்றுலாத் தலங்களை நோக்கிய பயணத் தேவையின் போக்கு தொடர்ந்து மாறிவரும் நிலையில், இந்த முடிவு இலங்கையை சர்வதேச சுற்றுலா விவாதங்களின் மையத்தில் நிறுத்தியுள்ளது.

இலங்கையின் சிறப்பான வளர்ச்சிக்கு அதன் அபாரமான புவியியல் பன்முகத்தன்மை முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

மிகக் குறுகிய தூரங்களுக்குள்ளேயே பல்வேறு தட்பவெப்ப மண்டலங்களைக் கொண்டுள்ள இத்தீவு, ஒரே பயணத்தில் கடற்கரைகள், மலைகள், மழைக்காடுகள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் ஆகியவற்றை அனுபவிக்கும் வாய்ப்பை பயணிகளுக்கு வழங்குகிறது.

தெற்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதிகள் அவற்றின் தூய்மையான கடற்கரைகள் மற்றும் கடல்சார் சூழல் மண்டலங்களுக்காகச் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

மத்திய மலைப்பகுதிகள் தேயிலைத் தோட்டங்கள், குளிர்ந்த காலநிலை மற்றும் ரம்மியமான ரயில் பாதைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளையில், யானைக் கூட்டங்கள், சிறுத்தைகளின் நடமாட்டம் மற்றும் செழுமையான பல்லுயிர் வளம் ஆகியவற்றின் காரணமாகத் தேசிய பூங்காக்கள் தொடர்ந்து உலகளாவிய கவனத்தை ஈர்த்து வருகின்றன.

பல்வேறு சூழல் மண்டலங்களின் இந்தச் சேர்க்கையானது, பலவிதமான பயண அனுபவங்களை ஒரே தீவில் கொண்ட ஒரு அபூர்வமான இடமாக இலங்கையை நிலைநிறுத்தியுள்ளது.

# நீர்க்கட்டணத்தில் திருத்தம் இல்லை

கொழும்பு, ஜூலை. 04

2026ஆம் ஆண்டின் அடுத்த ஆறு மாதங்களுக்கு நீர் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என, வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

அதன்படி, வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் நீர் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு அதிக செலவு ஏற்படவில்லை என்றும், அதனால் கட்டண அதிகரிப்பு தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வழக்கமாக ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நீர் கட்டணங்கள் திருத்தம் செய்யப்படும் நிலையில், இந்த வருடத்தின் முதல் பாதிக்காலத்திலும் கட்டண மாற்றம் செய்யப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, ஜூலை முதல் டிசெம்பர் வரையிலான காலத்திலும் கட்டண திருத்தம் இடம்பெற வாய்ப்பு குறைவாக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, மின்சாரக் கட்டண அதிகரிப்பால் மாத்திரமே சில செலவுகள் அதிகரித்துள்ளதாகவும், அது நீர் கட்டணத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

இதனால் தற்போதைய நிலையில் நீர் கட்டணங்களில் மாற்றம் செய்யத் தேவையில்லை என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் சுசில் ரணசிங்க கூறினார். (அ)

# கொழும்பு மாவட்ட பிரதேச செயலகங்களில் வங்கி அட்டைகள் மூலம் கொடுப்பனவு வசதி

கொழும்பு, ஜூலை. 04

அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்தின் ஒரு முக்கிய கட்டமாக, கொழும்பு மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலக அலுவலகங்களிலும் வங்கி அட்டைகள் மூலம் பொதுமக்கள் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய வசதி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் பிரதமர் ஹரினி அமரசூரிய தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது பதிவாளர் பிரிவு மற்றும் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரப் பிரிவுகளுக்கான பி.ஓ.எஸ் இயந்திரங்களை பிரதமர் உத்தியோகபூர்வமாக இயக்கி வைத்தார்.

அத்துடன், இந்த புதிய முறையைப் பயன்படுத்தி பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் நடைமுறையையும் பிரதமர் அடையாள ரீதியாக பார்வையிட்டார்.

இலங்கை வங்கியின் நிதி மற்றும் தொழில்நுட்ப அனுசரணையுடன், கொழும்பு மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலக அலுவலகங்களும் இந்த திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், பணமாக செலுத்தும் முறைக்கு மாற்றாக பாதுகாப்பான அட்டை வழியிலான கொடுப்பனவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய டிஜிற்றல் மாற்றத்திற்கு ஏற்ப இலங்கையின் பொதுத்துறையை நவீனமயமாக்குவது அரசாங்கத்தின் முதன்மை முன்னுரிமையாகும் என பிரதமர் ஹரினி அமரசூரிய இதன்போது தெரிவித்தார்.

இந்த அமைப்பின் மூலம் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான சேவைகளை மிகவும் திறமையாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், இதன் மூலம் மோசடி அபாயங்கள் குறைவடைந்து வருமானம் சேகரிப்பில் வெளிப்படைத்தன்மை மேம்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அரிசியை உப உணவு உற்பத்திகளுக்கும் பயன்படுத்த அரசு நீண்ட காலத் திட்டம்!

கொழும்பு, ஜூலை. 04

அரிசியை நாட்டின் பிரதான உணவாக மாத்திரமன்றி, ஏனைய உப உற்பத்திகளுக்காகவும் பயன்படுத்துவதை விரிவுபடுத்துவதற்கான நீண்டகாலத் திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து வருவதாக விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது சமூக ஊடகப் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள அமைச்சர், நெல் மூலம் உற்பத்தி செய்யப்படும் அரிசியை, தினசரி முதன்மை உணவாக உட்கொள்வதற்கும் அப்பால் ஏனைய பல உற்பத்திகளுக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்துவது குறித்து தற்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சந்தையில் ஆரோக்கியமான போட்டித்தன்மையை உருவாக்குவதன் மூலம் விவசாயிகளைப் பாதுகாப்பதும், அதற்கான தடைகளை நீக்குவதுமே இந்தத் திட்டத்தின் பிரதான தூண்களாகக் கருதப்படுகின்றன என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விசேட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முதற்கட்ட ஆயத்தங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
04.07.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், ஆனி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழக முதலமைச்சர் விஜய்யுடனான தமிழ் தேசிய பேரவையின் சந்திப்பு

தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சர் ஜோசப் விஜய்யை தமிழ் தேசிய பேரவைப் பிரதிநிதிகள் நேற்று சென்னையில் மாநில அரசு தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

"இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஈழத்தமிழ் தேச மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் தரப்புக்களில் முக்கியமான அரசியல் கூட்டமைப்பு" என்று தங்களை அறிக்கையில் வர்ணித்திருக்கும் இந்த பிரதிநிதிகள் இலங்கை தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து விஜய்க்கு விரிவாக விளக்கிக் கூறியதாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் அரசியல் மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகள், ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை ஒழிக்கப்பட்டு தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும் சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியல் தீர்வின் அவசியம், இனவழிப்புக்கு சர்வதேச சுயாதீன விசாரணையின் அவசியம், இந்திய, இலங்கை தமிழ் மீனவர்களின் நிலையான தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள், இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை தமிழ் அகதிகளின் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பது உட்பட பல்வேறு முக்கியமான விவகாரங்கள் குறித்து விஜய்யுடன் கலந்துரையாடியதாக தமிழ் தேசிய பேரவையின் அறிக்கை கூறுகிறது.

தமிழ் தேசிய பேரவையின் பிரதிநிதிகள் இதே போன்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் கடந்த வருடம் டிசம்பர் நடுப் பகுதியில் அன்றைய மாநில முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழக தலைவருமான மு.க. ஸ்டாலினையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதும் அவர் ஒரு மாதம் கழித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தில் இலங்கை தமிழர்களின் பிரச்சினைக்கு சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வொன்றைக் காண இலங்கை அரசாங்கத்துக்கு புதுடில்லி நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததும் தெரிந்ததே.

தமிழ்நாடு சட்டசபை தேர்தலுக்கு முன்னதாக ஸ்டாலின் எழுதிய அந்த கடிதம் தனக்கு கிடைக்கப் பெற்றதாக பிரதமர் மோடி ஒரு சம்பிரதாயத்துக்கேனும் பதில் ஒன்றை அனுப்பியதாக செய்தி எதுவும் வந்ததாக அறியவில்லை. அத்துடன் அந்த கடிதத்துக்கு பிறகு இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து ஸ்டாலினும் அக்கறையுடன் கருத்து வெளியிட்டதாகவும் தகவல் இல்லை.

கடந்த டிசம்பரில் சென்னையில் அரசியல் கட்சிகள் பலவற்றின் தலைவர்களைச் சந்தித்து எமது பிரச்சினைகள் குறித்துப் பேசிய இதே தமிழ் தேசிய பேரவையினர் அன்று தமிழக வெற்றி கழக தலைவர் விஜய்யை சந்திக்க வேண்டும் என்று அக்கறை காட்டவில்லை. ஆனால், இன்று முதலமைச்சராக வந்த பிறகு அவரைச் சந்தித்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உதவுமாறு கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் நேரடி தலையீட்டுக்கு பின்னரான நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலப் பகுதியில் பாக்கு நீரிணையின் இருமருங்கிலும் எவ்வளவோ அரசியல் மாற்றங்கள் இடம் பெற்றுவிட்ட நிலையில், எமது பிரச்சினையில் புதுடில்லியினாலும் சென்னையினாலும் இன்று செய்யக் கூடியவற்றின் மட்டுப்பாடுகளை நன்றாகவே தெரிந்து வைத்துக் கொண்டு தமிழ் தேசிய பேரவை தமிழ்நாட்டின் இரு முதலமைச்சர்களை ஐந்து மாத இடை வெளியில் சந்தித்து எமது பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் கோரியிருக்கிறார்கள்.

விஜய் எந்த விதமாக எமது பிரச்சினையைக் கையாளப் போகிறார் என்று உடனடியாகத் தெரியவில்லை. வெறுமனே ஒரு கட்சியின் தலைவராக மேடைகளில் உணர்ச்சி பொங்கப் பேசுவதற்கும் முதலமைச்சராக ஆட்சியதிகாரத்துக்கு வந்த பிறகு பிரச்சினைகளை கையாளுவதில் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விஜய் தற்போது விளங்கிக் கொண்டிருப்பார். மத்திய அரசாங்கத்துடன் சுமுகமான உறவுகளைப் பேணுவதில் அக்கறை கொண்டிருப்பதாக சில தினங்களுக்கு முன்னர் தான் முதலமைச்சர் விஜய் கூறியிருந்தார்.

தமிழ் தேசிய பேரவை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கையெழுத்துடன் தனக்கு கையளித்த ஐந்து பக்க கடிதத்தை (தனக்கு தற்போது இருக்கும் பெருவாரியான ஆட்சிமுறைப் பிரச்சினைகளுக்கு மத்தியில்) ஆறஅமர இருந்து வாசித்த பிறகு விஜய் எத்தகைய பிரதிபலிப்பை வெளிக்காட்டுவார் என்பதை அறிய காத்திருக்கிறோம்.

முதல் நடவடிக்கையாக அவரும் ஸ்டாலின் போன்று கடிதம் ஒன்றை மோடிக்கு எழுதுவாரா? ஸ்டாலின் கடிதம் எழுத ஒரு மாதம் சென்றது. விஜய்க்கு எவ்வளவு காலம் தேவையோ?

## அவசரகாலச் சட்டங்களும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும்

ஊடக அறிக்கைகளின் பிரகாரம், அவசரகாலச் சட்ட விதிமுறைகளை காலாவதியாக விடுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது வரவேற்கத்தக்க ஒரு விடயமாக இருந்தாலும், சில மாதங்களுக்கு முன்பே இது செய்யப்பட்டிருக்க வேண்டும். "தாமதித்தாலும் நல்லது" என்றே கூற வேண்டும். அரசாங்கம் வேறு வழியின்றி இந்தத் தீர்மானத்திற்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.

அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நிவாரணப் பணிகளை எளிதாக்குவதற்காக, கடந்த ஆண்டின் இறுதியில் "டித்வா" சூறாவளி கரையைக் கடந்ததைத் தொடர்ந்து பிரகடனப்படுத்தப்பட்ட இந்த நீண்டகால அவசர நிலையை முடிவுக்குக் கொண்டு வருமாறு அரசாங்கத்திற்கு மக்கள் மத்தியில் இருந்து கடும் எதிர்ப்பும் பலத்த அழுத்தமும் ஏற்பட்டிருந்தது.

சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அவசரகால ஆடசியின் கீழ் இருந்துள்ளது. இதில் மிக நீண்ட, தடையற்ற அவசரகால ஆட்சிக் காலங்கள் இரண்டு ஜே.வி.பி கிளர்ச்சிகளின் போதும் ஈழப் போரின் போதும் ஏற்பட்டன. ஆட்சியில் இருந்தபோது தங்கள் நலன்களைப் பேணுவதற்காக அவசரகாலச் சட்ட விதிமுறைகளைத் தவறாகப் பயன்படுத்தாத அரசியல் கட்சி எதுவுமே இல்லை.

அரசியல்வாதிகள் தாங்கள் பதவியில் இல்லாதபோது அரசாங்கங்கள் கடுமையான கைது மற்றும் தடுப்புக்காவல் அதிகாரங்களை வழங்கும் அவசரகாலச் சட்ட விதிமுறைகளை தாராளமாகப் பாதிக்கப்படும் போது மட்டுமே சிவில் சுதந்திரங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து போராடுகிறார்கள்.

ஜனநாயக ரீதியான மாற்றுக்கருத்துக்களை ஒடுக்குவதற்காக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பதாக வழங்கிய வாக்குறுதியை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். இந்த ஆண்டு இறுதிக்குள் அதனைச் செய்வதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அண்மையில் உறுதியளித்திருந்தார். எவ்வாறாயினும், அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக முன்மொழியப்பட்டுள்ள, அதே போன்றதொரு கடுமையான சட்டத்தைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டமும் முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமூலமும் எல்லா நோக்கங்களுக்கும் ஒரே மாதிரியானவை தான் (இவை இரண்டும் இரட்டையர்களைப் போன்றன). புதிய சட்டமூலத்தைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு ஒரு மாற்றீடாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று பல்வேறு மனித உரிமை அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், அரசியல் ஆர்வலர்கள், ஐக்கிய நாடுகள் மற்றும் ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இந்த புதிய சட்டமூலத்தில் பயங்கரவாதம் சரியாக வரையறுக்கப்படவில்லை என்ற மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் கருத்தை அவர்களும் எதிரொலித்துள்ளனர். மேலும் இந்த அம்சம் சர்வதேச சட்டத்திற்கு முரணானது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

பயங்கரவாதம் தொடர்பில் அளவுக்கு அதிகமான பரந்த வரையறை இந்த புதிய சட்ட மூலம் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கும். மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்குத் தடுப்புக் காவல் உத்தரவுகளைப் பிறப்பிக்கவும், குற்றச்சாட்டு சுமத்தப்படுவதற்கு முன்னரான தடுப்புக் காவலை தலா இரண்டு மாதங்கள் வீதம், மொத்தம் ஒரு வருடம் வரை புதுப்பிக்கக்கூடிய காலத்திற்கு நீடிக்கவும் இந்த புதிய சட்டம் அதிகாரம் அளிக்க முயல்கிறது.

இந்தச் சட்டம் கட்டுப்பாடற்ற நிறைவேற்று அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்ள முயல்கிறது என்று சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற சர்வதேச மனித உரிமை அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் எவ்வளவு விரிவானவை என்றால், தடை உத்தரவுகளுக்கு (Proscription Orders) எதிரான மேன்முறையீட்டிற்கான ஒரே வழி நிறைவேற்றுத்துறையிடமே (Executive) உள்ளது, இது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையை (ICCPR) குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

அரசாங்கம் முன்மொழியப்பட்ட இந்த புதிய சட்டமூலத்தைக் கைவிட்டு, சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கக்கூடிய ஒரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.

அதேபோன்று , வெறும் விளம்பரக் கைதுகள், அரசியல் ரீதியாகத் தீர்மானிக்கப்படும் தடுப்புக் காவலில் வைத்தல்கள் மற்றும் சந்தேக நபர்களுக்கு எதிரான அவதூறு பிரச்சாரங்கள் போன்ற கலாச்சாரத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதாக வழங்கிய புனிதமான வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதற்கு முன்போ, நம்பகமான ஆதாரங்களைக் கண்டறிவதற்கு முன்போ சந்தேக நபர்களைக் கைது செய்து, அவர்களை நீண்ட காலத்திற்குத் தடுப்புக்காவலில் வைக்கின்றனர் அல்லது விளக்கமறியலில் வைக்கின்றனர். அதன் பின்னர், பொலிஸாரும் சட்டமா அதிபர் திணைக்களமும் சட்ட செயல்முறைகளை மிகவும் மெதுவாகவே முன்னெடுக்கின்றனர். கைது செய்த பின்னர் ஆதாரங்களைத் தேடும் தற்போதைய நடைமுறை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும், ஏனெனில் இது ஜனநாயகத்திற்கு முற்றிலும் எதிரானது.

இலங்கையின் நிரம்பி வழியும், அழுக்கான விளக்கமறியல் சிறைகளில் தங்குவதே ஒரு பெரிய தண்டனைக்குச் சமம். குற்றப்புலனாய்வுத் திணைக்கள ( சி.ஐ.டி.) தலைமையகத்தில் உள்ள தடுப்புக் காவல் அறைகளின் நிலைமை அதைவிட மோசமானது என்று நமக்குக் கூறப்படுகிறது. எனவே, நம்பகமான ஆதாரங்கள் இல்லாமல் எந்தவொரு நபரையும் தடுப்புக் காவலில் வைக்கவோ அல்லது விளக்கமறியலில் வைக்கவோ கூடாது.

முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சுரேஷ் சாலே, சி.ஐ.டி தலைமையகத்தில் உள்ள அழுக்கான, சிறிய அறையொன்றில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதை அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி நாளிந்த ஜயதிஸ்ஸ அண்மையில் நியாயப்படுத்த முயன்றார். அந்த அறைகள் நீண்ட காலமாக சந்தேக நபர்களைத் தடுப்பதற்கே பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், சாலேவுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், தேசிய மக்கள் சக்தி 76 ஆண்டு கால சாபத்தை முறியடிப்பதாக வாக்குறுதி அளித்துத்தானே ஆட்சிக்கு வந்தது?

கடந்த கால அரசாங்கங்கள் சிறைச்சாலைகள் மற்றும் சி.ஐ.டி தடுப்புக் காவல் அறைகள் போன்ற இந்த நரகக் குழிகளைப் பற்றி எதுவும் செய்யவில்லை, இப்போது அவர்களில் சிலரும் அவர்களின் ஆதரவாளர்களும் அந்த இடங்களில் வாடுகின்றனர். தற்போதைய தலைவர்கள் தங்களின் சொந்த நலன்களுக்காக வேனும் இத்தகைய கடுமையான சட்டங்களை ஒழித்து, விளக்கமறியல் சிறைகள் மற்றும் தடுப்புக் காவல் நிலையங்களின் நிலைமைகளை மேம்படுத்துவது நல்லது,

ஏனெனில் அடுத்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு நிலைமை தலைகீழாக மாறக்கூடும் அடுத்ததாக அவர்கள் அந்த இடத்திற்குச் செல்ல நேரிடலாம்.

(த ஐலண்ட் ஆசிரிய தலையங்கம்,
3 ஜூலை 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்** உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**இடபம்** கணவன்- மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மிதுனம்** சந்திராஷ்டமம் இருப்பதால் சில செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்** கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்** சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ் கவுரவம் உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**கன்னி** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் புதிய சிக்கல்கள் தீரும்.

**துலாம்** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**தனுசு** சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் ஈகோ பிரச்னைவந்துநீங்கும். பேச்சில்இங்கிதம்தேவைப்படும்

**கும்பம்** விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியருடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்** திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் முக்கியத்தும் தருவார்கள். சாதிக்கும் நாள்.

# வெலி ஓயா சிங்கள தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஜூலை. 04

முல்லைத்தீவு, வெலிஓயா பிரதேச சிங்கள மொழிப் பாடசாலைகளில் நீண்ட காலமாகத் தொண்டர் அடிப்படையில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள், தமக்கான நிரந்தர நியமனங்கள் தொடர்ந்தும் காலம் தாழ்த்தப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் தமது வாழ்வாதாரத்தைப் பாதித்துள்ள இப்பிரச்னைக்குத் துறைசார் அதிகாரிகள் உரிய தீர்வை வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இக்கோரிக்கையை முன்வைத்தனர்.

அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த 8 வருடங்களுக்கும் மேலாக வெலிஓயா பிரதேசத்தில் உள்ள சிங்கள மொழிப் பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைத் தொண்டர் அடிப்படையில் அர்ப்பணிப்புடன்முன்னெடுத்து வருகின்றோம்.

ஆனாலும் எமது பாடசாலைகளுக்கு நிரந்தர நியமனம் பெற்று வரும் ஆசிரியர்கள் பெரும்பாலும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

இதன் காரணமாக, அவர்கள் குறுகிய காலத்திற்குள் இடமாற்றம் பெற்றுத் தமது சொந்த மாவட்டங்களுக்குச் சென்றுவிடுகின்றனர்.

இந்தத் தொடர்ச்சியான ஆசிரியர் இடமாற்றச் சுழற்சியால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முழுமையாகப் பாதிக்கப்படுகின்றன.

வெளிமாவட்ட ஆசிரியர்கள் இடமாறிச் சென்றாலும், நாம் இந்த மாவட்டத்தையே நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு, எந்த வித நிரந்தர நியமனமும் இன்றித் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் கற்பித்து வருகின்றோம்.

அதனடிப்படையில் மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டும், நீண்ட காலமாக வாழ்வாதாரப் பிரச்னைகளை எதிர்கொண்டு வரும் நிலையை உணர்ந்தும், தமக்கு விரைவாக நிரந்தர நியமனங்களை வழங்கத் துறைசார் அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர். (அ)

## நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் பாரம்பரிய விளையாட்டு விழா!

யாழ்ப்பாணம், ஜூலை. 04

நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையம் தனது 81 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்துடம் பாரம்பரிய விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மன்றத்தின் தலைவர் வி.ஜனகன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக சங்கிலியன் மன்றத்தின் மூத்த உறுப்பினர் அ.மனோகரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபையின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். உதயசீலன், யாழ். மாநகர சபையின் பொதுசன தொடர்பு அதிகாரி எஸ்.லோகசிங்கம், நயினாதீவு கணேச வித்தியாலய ஆசிரியர் அ.அங்கரூபன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சங்கிலியன் மன்ற போதனாசிரியை திருமதி க.பிரியதர்சினியும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் இறுதியில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ)

## நல்லை ஆதீனத்தில் தேவார பண்ணிசை ஆய்வு கருந்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை. 04

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் தேவாரப் பண்ணிசைச் சிறப்பு ஆய்வுக் கருந்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் அவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆசியுரையினைத் திருச்சி தருமை ஆதீன மௌனமட கட்டளை விசாரணை முனைவர் ஸ்ரீமத் மௌன திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகளும்,

வளவாளராகத் தருமை ஆதீன தேவாரப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் பத்ம ஸ்ரீ திருமுறைக் கலாநிதி திருத்தணி சுவாமிநாதன் ஓதுவாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து பயன்பெறுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## பருத்தித்துறை நகர சபையினால் ஓட்டோ தரிப்பிடத்துக்கு கொட்டகை

யாழ்ப்பாணம், ஜூலை. 04

வடமராட்சி பருத்தித்துறை நகர சபையினால், நவீன சந்தை தொகுதியில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்திற்கு, தகரத்திலான கொட்டகை ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சி உறுப்பினர் ஜெ.ஜெயகோபியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையை அடுத்து, ஓட்டோ தரிப்பிடத்திற்கான கொட்டகை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பருத்தித்துறை நவீன சந்தை தொகுதியில், பொலிஸார் கடமையை மேற்கொள்வதற்கும், நகர சபையினால் தனியான அறை ஒன்றும் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா மாநகர சபை செங்கோல் மீட்பு நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர் பொலிஸார்

வவுனியா, ஜூலை. 04

வவுனியா மாநகர சபை செங்கோல் மீட்கப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டதாக வவுனியா தலைமைபொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.யே.எஸ். ரத்னமலலா தெரிவித்தார்.

வவுனியா மாநகர சபையின் செங்கோல், பதக்கம் மற்றும் முதல்வர் ஆடை என்பன காணாமற்போனதாக சபையின் செயலாளரால் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பிரதான பரிசோதகர் ஆனந்த விஜேயசேகர தலைமையில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொலிஸார், வவுனியா, ஓயார் சின்னக்குளம் பகுதியில் இருந்து வவுனியா மாநகர சபைக்குரிய செங்கோலை மீட்டு எடுத்தனர்.

முன்னாள் மேயர் வழங்குமாறு கூறி அவருடைய நண்பர் ஒருவர் அங்கு கொண்டு சென்று செங்கோலை வழங்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அங்கு கைப்பற்றப்பட்ட செங்கோல் வவுனியா நீதிமன்றில் நேற்று பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த செங்கோலை வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஒப்படைக்குமாறு மன்றினால் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த செங்கோல் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் மேயர் மற்றும் பெண் ஒருவர் உட்பட 4 நபர்களையும் கைது செய்ய நீதிமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் விரைவில் கைது செய்யபடுவார்கள் எனவும், அவர்கள் பயன்படுத்திய சொகுசு காரினையும் பொலிஸார் தேடி வருவதாகவும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாணய நிதிய ஒப்பந்தத்தால் அரசுக்குப் பாரிய சவால்கள்!

## வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை. 03

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் காரணமாக அரசாங்கம் ஒருபுறம் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த வாசுதேவ நாணயக்கார, தற்போதைய அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள சர்வதேச நிதி நெருக்கடிகள், இயற்கை பேரிடர்கள் மற்றும் நுகர்வோர் நலன் சார்ந்த கொள்கைகள் குறித்து விசேட கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்-

இந்த ஒப்பந்தமானது தற்போதைய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டதொன்றல்ல. இது கடந்த கால அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு தற்போதைய அரசாங்கத்தின் தலையில் சுமத்தப்பட்ட ஒரு முடிச்சு அல்லது சிக்கலான நிலை.

இதேவேளை, அரசாங்கம் எதிர்பாராத வேறு சில சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நாட்டில் ஏற்பட்ட டித்வா சூறாவளி காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டது.

இதன் விளைவாக, அரசாங்கத்துக்கு பட்ஜெட்டில் மேலதிகமாக 500 பில்லியன் ரூபாயை செலவினமாக சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய டெங்கு தொற்று நோய்ப் பரவலும் அரசாங்கத்திற்கு மற்றுமொரு பெரும் சவாலாக மாறியுள்ளது.

இவ்வாறான தொடர் சவால்களுக்கு மத்தியிலும், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை ஓரளவிற்கு நியாயமான மட்டத்தில் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உற்பத்தியாளர்களை விட, நாட்டின் பெரும்பான்மையான மக்களாக விளங்கும் நுகர்வோரின் நலன் குறித்து அரசாங்கம் அதிகமாகச் சிந்திப்பதனாலேயே இது சாத்தியமாகியுள்ளது. அரசாங்கத்தின் இந்த நுகர்வோர் சார்பு அணுகுமுறையை பாராட்டவேண்டும். உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் குறித்து அரசாங்கம் போதிய கவனம் செலுத்தவில்லை.

நுகர்வோருக்கு வழங்கும் முக்கியத்துவத்தை உற்பத்தியாளர்களுக்கும் வழங்கத் தவறியமைக்காக அரசாங்கம் மீது நியாயமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டி விமர்சிக்க வேண்டியது அவசியம் என்றாலும், அதேநேரம் அரசாங்கம் தற்போது எதிர்கொள்ளும் பிரம்மாண்டமான சவால்களையும் நாம் கவத்தில் கொள்ள வேண்டும்.

சுயநல நோக்கோடு அரசாங்கத்தின் மீது அபாண்டமான தாக்குதல்களை நடத்துவதை விடுத்து, அரசாங்கம் இன்று எதிர்நோக்கும் இக்கட்டான சூழ்நிலையை ஓரளவுக்கு மனிதாபிமானத்துடனும் அனுதாபத்துடனும் அணுகிப் பேச வேண்டும்-என்றார். (அ)

# எரிபொருள்கள் விலை சூத்திரத்தில் முறைகேடு

## ஹர்ஷன ராஜகருணா சாடல்




கொழும்பு, ஜூலை. 04

நடப்பு அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்காக மக்களுக்குப் பாரிய பொய்களைக் கூறி ஏமாற்றியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா குற்றம் சாட்டியுள்ளார்.

எதுல்கோட்டேயிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் மீண்டும் ஒரு முறை பஸ் கட்டணங்களை உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் காரணமாக மக்கள் கடுமையான வாழ்க்கைச் செலவுப் பிரச்னைக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், கப்பலில் இருந்து இறக்கப்படும் விலையிலேயே மக்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் என்றும் அமைச்சர்களின் எரிபொருள் தரகுப் பணம் ஒழிக்கப்படும் என்றும், மின்சாரக் கட்டணம் மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்படும் என்றும் பிரசாரம் செய்தபோதிலும், இன்று எரிபொருள் விலை சுமார் 40 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் எரிபொருள் விலையை மிகக் குறைந்த தொகையினால் அரசாங்கம் குறைத்திருந்த போதிலும், உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போது விலையை உயர்த்தும் அரசாங்கம், உலக சந்தையில் விலை குறையும் போது அதன் நன்மைகளை மக்களுக்கு வழங்குவதில்லை-என்றார். (அ)

# காலி மாநகர சபையின் அதிகாரிகள் இருவருக்கு மீண்டும் விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை. 04

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்ட காலி மாநகர சபையின் வருமானப் பரிசோதகர் மற்றும் களப்பணியாளர் ஆகிய இருவரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தனியார் விற்பனை நிலையம் ஒன்றிற்குச் சொந்தமான விளம்பரப் பலகையை காட்சிப்படுத்துவதற்காக மாநகர சபைக்குச் செலுத்த வேண்டிய வரி தொடர்பான ஆவணங்களை விரைவாகப் பெற்றுத் தருவதாகக் கூறி, சந்தேகநபர்கள் 5,000 ரூபாய் இலஞ்சம் கோரியுள்ளதாகப் புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, சந்தேகநபர்கள் காலி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்ப டுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாவது சந்தேகநபர், காலி நீதவான் முன்னிலையில் தாமாக முன்வந்து வாக்குமூலம் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

இந்த நிலையில், சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை கோரிய போதிலும், நீதவான் அந்த விண்ணப்பத்தை நிராகரித்துள்ளார். (அ)

# தேசிய வரி வாரம் ஜூலை 6 ஆரம்பம்

கொழும்பு, ஜூலை. 03

தேசிய வரி வாரத்தை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்படும் 'வரி சக்தி 2026' விசேட வேலைத்திட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டம் இந்த மாதம் 15 ஆம் திகதி வரை தொடரும் என ஜனாதிபதி செயலகத்தின் வருமான நிர்வாகம் மற்றும் நவீனமயமாக்கல் பிரிவின் பணிப்பாளர் அசித முனசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் வரி முறைமை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், வரிக்கொள்கைகளுக்கு இணங்கி நடப்பதை ஊக்குவிப்பதையுமே இந்த வேலைத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வரிச் சீர்திருத்தங்கள் காரணமாக, குறிப்பாகப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி போன்ற வரி விகிதங்கள் தற்போதும் உயர் மட்டத்தில் காணப்படுவதாக அசித முனசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த வரி வாரம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டு, வரி வசூலிப்பில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகளைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அம்மாவுக்கு, மனைவிக்கு சுகமில்லை எனக் கூறி இடமாற்றம் கேட்க முடியாது!

## சீர்குலைந்த அரச சேவையை சீர்செய்ய கிழக்கு ஆளுநர் அதிரடி



திருமலை, ஜூலை. 04

நியமனம் பெறும் இடத்தில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் கட்டாயமாக சேவை செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் அந்த காலப்பகுதிக்குள் நியமனங்கள் மாற்றப்பட மாட்டாது. நான் ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், சிலர் அம்மாவுக்கு சுகமில்லை, அப்பாவுக்கு சுகமில்லை அல்லது மனைவிக்கு சுகமில்லை என்று கூறி நியமனங்களை மாற்றிக்கொள்ள வருகிறார்கள் என கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பட வரைகளை உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்து விசேட தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இந்நியமன நிகழ்வு திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது 61 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும், 07 படவரைகளை உத்தியோகத்தர்களுக்கும் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டதுடன், முகாமைத்துவ சேவையிலிருந்து விசேட தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட 33 உத்தியோகத்தர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, நிதி ஒழுக்கத்தைப் பேணுவதன் மூலம் அரச சேவையை வெற்றிகரமானதாக மாற்றியமைக்க நம்மால் முடியும். கடந்த காலத்தில் "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்றொரு திட்டம் இருந்தது. நான் அந்த கருத்தாக்கத்துடன் உடன்படவில்லை. இப்போது புதிய நியமனங்களைப் பெறுபவர்கள் "அருகிலுள்ள அலுவலகமே சிறந்த அலுவலகம்" என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த நியமனங்கள் மாவட்ட நியமனங்கள் அல்ல, இவை கிழக்கு மாகாண நியமனங்கள் என்பதை அனைவரும் உறுதியாக நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் ஒரு விசேட விடயத்தைக் கூற வேண்டும். நியமனம் பெறும் இடத்தில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் கட்டாயமாக சேவை செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் அந்த காலப்பகுதிக்குள் நியமனங்கள் மாற்றப்பட மாட்டாது. நான் ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், சிலர் அம்மாவுக்கு சுகமில்லை, அப்பாவுக்கு சுகமில்லை அல்லது மனைவிக்கு சுகமில்லை என்று கூறி நியமனங்களை மாற்றிக்கொள்ள வருகிறார்கள்.

சேவை எங்கு தேவைப்படுகிறதோ, அங்கு நாம் கட்டாயமாக சேவை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நாம் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல், தமக்குத் தேவையான இடங்களில் சேவை செய்ய முற்படும்போது அரச சேவையின் சமநிலை சீர்குலைந்துவிடும்-என்றார். (அ)

# வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராய்வு

திருமலை, ஜூலை. 04

திருகோணமலை மாவட்ட வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், வெளி விவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திரா தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சண்முகம் குகதாசன், இம்ரான் மஹ்ரூப் உட்பட ஈச்சிலம்பற்று பிரதேச சபை தவிசாளர், முப்படைகளின் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வன இலாகா திணைக்களம் ஊடாக எல்லையிடப்பட்ட காணிப் பிரச்சனைகள் மற்றும் உள்ளூர் பிரதேச மக்களின் பொது விடயங்கள் தொடர்பிலும் விரிவாக இங்கு கலந்துரையாடப்பட்டன.

மேலும் பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட மதிப்பீட்டு நடவடிக்கைகள் மூலமாக எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

பிரதேச உட்கட்டமைப்பு வீதி அபிவிருத்தி, கல்வி சுகாதார அபிவிருத்திகளை இலக்காக கொண்ட விடயங்கள் தொடர்பிலும் பொதுவாக கலந்துரையாடப்பட்டன. (அ)

# மண்முனை பாலத்தடியில் வீதித் தடை அவசியமா?

## ஜனாதிபதிக்கு கமலநலக் குழு தலைவர் அகிலேஸ்வரன் கடிதம்

மட்டக்களப்பு, ஜூலை. 04

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்மேற்கு பிரிவில் உள்ள மண்முனை பாலத்தடியில் உள்ள போலீஸ் வீதித் தடை அவசியமா ? இதனை அகற்றித் தருமாறு கொக்கொடிச்சோலை கிளாக்கொடிச்சேனை கமநல அமைப்பின் தலைவரும் முன்னாள் தவிசாளரும் அதிபருமான சிவ.அகிலேஸ்வரன் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவிற்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது-

தங்களின் அரசாங்கம் பதவியேற்ற உடன் நாட்டில் உள்ள சில வீதித் தடைகள் முற்றாக நீக்கப்பட்டன.

ஆனால் மண்முனை பாலத்தடியில் உள்ள வீதித்தடை மாத்திரம் இன்றும் இருக்கின்றது. இதனால் பொதுமக்கள் பலத்த அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.எனவே இதை அகற்றி தருமாறு வேண்டுகின்றோம்.-என்றுள்ளது. (அ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 3 நாள் வதிவிட பயிற்சிப்பட்டறை!

மட்டக்களப்பு, ஜூலை. 04

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கிவரும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 3 நாள் வதிவிடப் பயிற்சிப்பட்டறை மட்டக்களப்பில் நடைபெற்றது. நடைபெற்றது.

மட்டக்களப்பு சர்வோதயம் பயிற்சி நிலையத்தில் ஓசன் ஸ்டார் லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டிலும் பொன்திவ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் இந்த பயிற்சிபட்டறை நடத்தப்பட்டது.

இதில் ஓசன் ஸ்டார் லங்கா நிறுவனத்தின் கீழ் இயங்கும் 31 பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள் 70 பேர் கலந்து தங்கள் பாடசாலை மாணவர்களின் அறிவை மேம்படுத்துவதற்கான பல புதிய விடயங்களை கற்பிக்கும் நோக்கில் இந்த பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது.

இப்பயிற்சி பட்டறையில் பாலர் பாடசாலை மாணவர்களின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் செயற்பாடாக சிறுவர் அபிவிருத்தி திட்டம் என்பது முக்கிய இடத்தினைக் கொண்டிருந்தது.

இந்த பயிற்சி பட்டறையில் 7 முக்கிய விடயங்களில் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டதுடன் ஆசிரியர்கள் மிகவும் ஆர்வதுடன் செய்யப்பட்டனர். 2027 ஆம் ஆண்டிற்கான புதிய செயற்பாடான 'இந்த உலகினை புரிந்துகொள்வது'என்ற விசேட திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை முக்கிய விடயமாகும்.

இந்த மூன்றுநாள் பயிற்சி பட்டறையில் ஓசன் ஸ்டார் லங்கா நிறுவனத்தின் ஸ்தாபகர் டிலானி பண்டர் இங்கிலாந்தில் இருந்து வந்து கலந்து கொண்டார்.

மேலும் ஓசன் ஸ்டார் லங்கா நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றதுடன் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (அ)



# சாய்ந்தமருது கடற்கரைப் பூங்காவிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை

அம்பாறை, ஜூலை. 04

சாய்ந்தமருது கடற்கரை பூங்காவில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அவசர நடவடிக்கை எடுத்துள்ளார்.

அங்கு கள விஜயம் மேற்கொண்டு, பூங்காவின் நிலைமைகளை ஆராய்ந்தபோது சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்பான பணிப்புரைகளை அவர் விடுத்துள்ளார்.

இதன்போது பூங்காவை மேலும் ஒளியூட்டும் வகையில் தேவையானளவு பிரகாசமான மின் விளக்குகளை உடனடியாக பொருத்துமாறும் மலசல கூடங்கள் மற்றும் நீர் வசதிகளை ஒழுங்குபடுத்தி, செயற் படுத்துமாறும் மின்சாரக் கட்டமைப்புகளில் காணப்படும் குளறுபடிகளை சீரமைக்குமாறும் மாநகர ஆணையாளர் அறிவு றுத்தியுள்ளார்.

அத்துடன் தொழில்நுட்பக் கோளாறுகளு டன் அமைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் விளையாடும் பகுதிகளை அவர்களின் பாதுகாப்பு நலன்களைக் கருத்தில் கொண்டு, முறையாக சீர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் அவர் அவதானம் செலுத்தியுள்ளார்.



இக்கள விஜயத்தில் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் அஹ்சன் மனாஸிர், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சமஷ்டி அடிப்படை...

இதன் போது, எழுத்துமூலமாக கோரிக்கை கடிதம் கையளிக்கப்பட்டது.

ஈழத்தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும், அரசியல், மனித உரிமை பிரச்னைகள், ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை ஒழிக்கப்பட்டு தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வின் அவசியம், ஈழத்தமிழர் இனவழிப்புக்கு சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம்,

இந்திய - ஈழத்தமிழ்க் கடற்தொழிலாளர்களின் பிரச்னைக்கு நிலையான தீர்வு காணும் நடவடிக்கைகள்,

இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் நீண்டகாலப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணுதல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப் பட்டன.

குறித்த சந்திப்பில்,

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியப் பேர வையின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தலைமையில்,

தமிழ்த் தேசியப் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத் திய ஏழு பேர் கொண்ட குழுவினர் பங்கேற்றனர்.

இந்தக் குழுவில்,

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்,

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன்,

ஜனநாயகத் தமிழர் கட்சி தலைவர் கே.வி. தவராசா,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ், உத்தியோகபூர்வ பேச்சாளர் கனகரட்ணம் சுகாஷ், கொள்கைப் பரப்புச் செயலாளர் நடராஜர் காண்டீபன் ஆகியோர் பங்கேற் றுள்ளனர். (அ)

## குற்றவாளிகளை உடன்..

சமூகம் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டதுடன், காத்தான்குடி பிரதேசம் பெரும் அவப்பெயரையும் பாதிப்பையும் எதிர்கொண்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அன்று ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் எங்க ளது ஆளுநர் மற்றும் அமைச்சர் பதவிகளை எல்லாம் துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, பல ஆயிரக்கணக் கான கோடி ரூபாய் நஷ்டங்களைச் சந்தித்ததுடன், வீடு களை விட்டு வெளியே வர முடியாத அளவுக்கு ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் பல்வேறு துன்பங்களை அனுபவித்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன், தற்போது ஜனாதிபதி அநுர குமார திசா நாயக்கவின் தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும், இந்த விசாரணைகளை முடக்குவதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர், அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இக்கொடூரத் தாக்குதலுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்ற நற்சான்றிதழை இந் தச் சமுதாயம் பெற வேண்டிய தேவையுள்ளது. எங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அந்தப் பாரிய இழிவிலிருந்து முஸ்லிம் சமூகம் விடுபட வேண்டும் எனவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

எனவே, அரசாங்கம் முன்னெடுக்கும் இந்த நேர்மை யான விசாரணைகளுக்கு முஸ்லிம் சமூகம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது.

குற்றவாளிகளின் பதவி, பட்டம் அல்லது அந்தஸ் தைப் பார்க்காமல், அவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாகக் கைது செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் முஸ்லிம் சமூகத்திற்கு விடிவும் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா மேலும் தெரிவித்தார். (அ)

## அமைச்சர் விஜித...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந் தசங்கரியைச் சந்திப்பதற்கான நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தச் சந்திப்பின் போது, தனது நீண்ட கால அரசியல் அனுபவங்களை அவர் என்னுடன் விரிவாகப் பகிர்ந்து கொண்டார்.

நாட்டின் அரசியல் துறையில் அவர் ஏற்படுத்திய சிறந்த முன்னுதாரணங்களையும், நாட்டுக்காக ஆற்றிய பாரிய பங்களிப்புகளையும் நான் இதன்போது வெகு வாகப் பாராட்டியதுடன், அவருக்கு எனது நன்றியறி தலையும் மதிப்பையும் தெரிவித்துக்கொண்டேன்." - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## சமையல் எரிவாயு...

இதற்கமைய, 4765 ரூபாயாக காணப்பட்ட 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4465 ரூபாய் ஆகும்.

அதேபோல், 1910 ரூபாவாக நிலவிய 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 118 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1792 ரூபாவாகும்.

890 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 55 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 835 ரூபாவாகும் என லிட்ரோ எரிவாயு நிறு வனம் அறிவித்துள்ளது. (அ)

## முன்னாள் கடற்படை...

ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டு, பின்னர் மாலை நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளார்.

நேற்றுக் காலை 10:05 மணியளவில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் வளாகத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

யோஷித ராஜபக்ஷ, கடற்படையின் நிறைவேற்று அதிகாரி பதவிக்குரிய அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருக்காத நிலையிலும், விதிகளை மீறி அவர் அந்தப் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரிலேயே வசந்த கரன்ன கொட கைது செய்யப்பட்டார்.

அத்துடன், கடற்படையின் நிலையான ஆள்சேர்ப்பு நடைமுறைகளைப் புறந்தள்ளி, பிரித்தானியாவின் றோயல் கடற்படைக் கல்லூரியில் யோஷித ராஜபக்ஷ பயிற்சி பெறுவதற்காக அரச நிதி பயன்படுத்தப்பட்டது என்றும் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந்தது.

இந்த முறைகேடான செயற்பாடுகள் அனைத்தும் இலஞ்ச, ஊழல் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுவதாகச் சுட்டிக்காட்டிய ஆணைக் குழு, கைது செய்யப்பட்ட வசந்த கரன்னகொடவை கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று மாலை ஆஜர்படுத்தியது.

இதன்போது, இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேகநபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணிகளின் சமர்ப் பிப்புகளைப் பரிசீலித்த கொழும்பு பிரதம நீதிவான் அசங்க எஸ். போதரகம, வசந்த கரன்னகொடவைப் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பில் யோஷித ராஜபக்ஷ ஏற்கனவே கடந்த ஜூன் 17ஆம் திகதி கைது செய்யப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கல்வித்துறைக்கே...

அபிவிருத்தி நன்கொடையின் ஊடாக 2026ஆம் ஆண்டிற்கான மாகாண கல்வி அமைச்சின் வேலைத்திட் டத்தின் கீழ் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் புதிய வகுப்பறைக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்,

80 ஆண்டுகளுக்கும் மேலான கல்விச் சேவையை வழங்கி வரும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி வட மாகாணத்தின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருவதாகக் குறிப்பிட்டார்.

"ஒரு நாட்டை நிலையான முறையில் கட்டியெழுப்பு வதற்கான மிகப்பெரிய முதலீடு மனித வள மேம்பாடா கும். அந்த மனித வளத்தை உருவாக்குவதற்கான அடித்த ளம் கல்வியே.

அதனால்தான் எமது அரசாங்கம் கல்வித் துறைக்கு முன்னுரிமை அளித்து பல்வேறு மேம்பாட்டு நடவடிக் கைகளை முன்னெடுத்து வருகிறது.

மேலும், போதைப்பொருள் வியாபாரிகள் மாணவர் களை இலக்காகக் கொண்டு சமூகத்தை சீரழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும், அதனால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மாணவர்களின் கல்விப் பயணத்தில் நிலவும் சவால் கள் மற்றும் அழுத்தங்களை கருத்தில் கொண்டு கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதிப்படுத் தும் வகையில் கல்வி முறைமையை மேம்படுத்த அரசாங் கம் தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாண பிர தம செயலாளர் தனுஜா முருகேசன், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலையின் பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாண வர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண் டனர். (அ)

## உயர் வருமான...

இலங்கையின் மொத்த தேசிய வருமானம் டொலர் கணக்கீட்டில் உலக வங்கியின் வரம்பைத் தாண்டியதன் காரணமாக, நாம் இரண்டாவது முறையாக இந்த நிலையை அடைந்துள்ளோம். இதற்கு முக்கிய காரணம், 2023 மற்றும் 2024 காலப்பகுதியில் டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 370 லிருந்து 300 ரூபாவுக்கு வலுவடைந்ததே தவிர, ஒட்டுமொத்த நாட்டின் உண்மையான பொருளாதார வளர்ச்சி அல்ல.

கடந்த 2019ஆம் ஆண்டில் இலங்கை முதன்முறையாக இந்த உயர் நடுத்தர வருமான நிலையை எட்டியபோது, நாட்டின் மக்கள் தொகையில் வறுமை விகிதம் 11.5 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது. ஆனால், தற்போது 2025 ஆம் ஆண்டின் இறுதியில் அதே இலக்கை நாம் மீண்டும் தொட்டுள்ள போதிலும், நாட்டின் வறுமை விகிதம் 22.1 சதவீதமாக, அதாவது இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

அதுமட்டுமன்றி, உலக வங்கியின் உத்தியோகபூர்வ அறிக்கையின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நாட்டில் போதிய உணவுப் பாதுகாப்பு இல்லாத ஏழை மக்களின் எண்ணிக்கை தற்போது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்ற அதிர்ச்சியூட்டும் உண்மையும் வெளிவந்துள்ளது.

அரசாங்கத்தைச் சேர்ந்த சிலர் இந்த புதிய வகைப்படுத்தலை ஒரு பெரிய வெற்றியாகக் கொண்டாடி வருகின்ற போதிலும், ஒரு நாட்டின் உண்மையான நிலையான அபிவிருத்தி என்பது ஒரு சிறிய குழுவினரிடம் மட்டும் செல்வம் குவிவதல்ல மாறாக, நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்கும் அதன் பலன்கள் சென்றடைவதே ஆகும்.

தற்போதைய பொருளாதார எண்கள் வெறும் கண்துடைப்பாகவே உள்ளன, ஏனெனில் வசதி படைத்தவர்கள் மேலும் முன்னேற, ஏழை எளியவர்கள் மேலும் நலிவடைந்துள்ளனர் என்பதை இந்தத் தரவுகள் காட்டுகின்றன.

அரசாங்கம் தற்போதைய எரிபொருள் விலை குறைப்பு போன்ற தற்காலிக சலுகைகளைக் காட்டி மக்களை ஏமாற்ற முடியாது. எரிபொருள் விலை குறைந்தாலும், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ள விசித்திரமான சூழலே நாட்டில் நிலவுகிறது-என்றார். (அ)

## கொக்குத்தொடுவாய்...

அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதி, வவுனியா மாவட்டச் செயலகத்தில் விவசாய மற்றும் காணி அமைச்சரின் தலைமையில் விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதன்போது, கொக்குத்தொடுவாய் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத உப்பள நிர்மாணம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணும் பொறுப்பு முல்லைத்தீவு மாவட்ட நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், நாடாளுமன்ற உறுப்பினரின் கடிதத்தில் நினைவுபடுத் தப்பட்டுள்ளது.

இந்த விடயம் ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி மேலதிக நடவடிக்கைக்காக, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்குப் பாரப்படுத்தப்பட்ட போதிலும், இதுவரை அது குறித்து எந்தவித அடுத்தகட்ட நிர்வாக நடவடிக்கைகளோ அல்லது முன்னேற்ற அறிக்கைகளோ சமர்ப்பிக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, பொதுமக்களின் வாழ்வாதாரத்தையும் நில உரிமைகளையும் பாதுகாப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் நேரடித் தலையீடு இன்றியமையாதது என்பதால், குறித்த விடயம் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்த விரிவான விளக்க அறிக்கையொன்றை விரைவாக வழங்குமாறு மாவட்ட அரசாங்க அதிபரிடம், பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள் ளார். (அ)

## பூஜித், நிலந்த...

செய்யப்பட வேண்டும் என்ற காவல்துறை கட்டளைச் சட்ட விதியை சுட்டிக்காட்டி பிரதிவாதிகள் இந்த கோரிக்கையை விடுத்திருந்தனர்.

எனினும், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக அறிக்கைகள் மூலமே பிரதிவாதிகளின் பொறுப்புக்கூறல் குறித்து முறைப்பாட்டாளர்களுக்குத் தெரியவந்தது என்றும், அதன் பின்னரே உரிய காலத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்றும் முறைப்பாட்டாளர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

இந்த விடயத்தை முதற்கட்ட சட்டப் பிரச்சினையாகக் கருதி விசாரிக்க முடியாது எனவும், வழக்கு விசாரணையின் சாட்சியங்கள் மூலமே இதனைத் தீர்மானிக்க முடியும் எனவும் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.


மாவட்ட நீதிமன்றத்தின் குறித்த உத்தரவை உறுதி செய்த நீர்கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளான இவோன் பெர்னாண்டோ மற்றும் நிரோஷா பெர்னாண்டோ ஆகியோர், பூஜித மற்றும் நிலாந்தவின் அனுமதி கோரும் மனுக்களை நேற்று நிராகரித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# நாடு கறுப்பு பட்டியலில் சேர்க்கப்படும் அபாயம்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை. 04

நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் நாட்டை கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் அபாயத்தைத் தடுத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டே புதிய திருத்தச் சட்ட மூலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

அரசாங்க நிதி பற்றிய குழு நேற்று முன் தினம் வியாழக்கிழமை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடியபோது, நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதன்போது கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு பல விசேட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், பொருளாதாரத்துக்கு நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் துறைகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மாறிவரும் உலக நடப்புக்கு அமைய, நிதி சார்ந்த சட்டங்களைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. குறிப்பாக, இலத்திரனியல் முறைமை ஊடான திருட்டுக்கள் மற்றும் தாக்குதல்கள் உலகளாவிய மட்டத்தில் தீவிரமடைந்து வருகின்றன. இத்தகைய நவீன சவால்களை வெற்றிக்கொள்வதற்குப் புதிய சட்டங்களை இயற்ற வேண்டும்.

நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் நாட்டை கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் அபாயத்தைத் தடுத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டே பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம், நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம், பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் என்பன கொண்டு வரப்பட்டுள்ளன

தவறான நிதிப் பரிமாற்றங்களினால் நாடு கறுப்புப் பட்டியலில் உள்வாங்கப்பட்டால், அது பொருளாதாரத்துக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே, எதிர்கால சவால்களை வெற்றிக்கொள்வதற்காகவே இவ்வாறான திருத்தச் சட்டமூலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன - என்றார். (அ)

# சீரழிந்த நீதித்துறை ஒரு நாட்டை மிக விரைவாகவே அழித்துவிடும்!

## பிரதம நீதியரசர் பத்மன் சூரசேன எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 04

இயற்கைச் சீற்றங்களினால் மட்டுமல்லாமல், ஒரு நாட்டின் நீதித்துறை சீர்குலைவதனாலும் அந்த நாடு மிகக் குறுகிய காலத்திற்குள் முழுமையாக அழிந்துவிடக்கூடும் என பிரதம நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன எச்சரித்துள்ளார்.

இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட நீதவான்களுக்கான பயிற்சிப் பட்டறையில் முதன்மை உரையாற்றும் போதே அவர் இந்த கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். நீதித்துறை சீர்குலைவதனால் ஒரு நாட்டிற்கு ஏற்படும் அழிவு என்பது கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மிக மோசமானதாக இருக்கும்.

அவ்வாறானதொரு துரதிர்ஷ்டவசமான நிலை நாட்டில் ஏற்பட்டால், எந்தவொரு சர்வதேச நன்கொடையாளராலோ அல்லது வெளிநாட்டு நிதி உதவியினாலோகூட அந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார். நாட்டின் இறையாண்மையின் பிரதான தூணாக விளங் கும் நீதித்துறை அதிகாரம் என்பது, நீதிச் சேவை ஆணைக் குழுவினாலோ அல்லது தனிப்பட்ட வேறு தரப்பினராலோ வழங்கப்படுவது அல்ல,

நீதி அதிகாரம் என்பது முழுமையாக மக்களுக்கே சொந்தமானது. நீதிபதிகள் என்பவர்கள் மக்களின் அந்தப் பாரிய அதிகாரத்தையே, மீண்டும் மக்களின் நன்மைக்காகவும் பாதுகாப்புக்காகவும் மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

நீதித்துறையின் சுதந்திரம் என்பது வெறும் அரசியலமைப்பினால் மட்டும் திடீரென வழங்கப்பட்ட ஒன்று அல்ல. அது தலைமுறை தலைமுறையாக மக்களிடம் இருந்து கைமாறி வந்த ஒரு அருவமான பாரம்பரியம் ஆகும். அரசியலமைப்பு என்பது அந்தப் பாரம்பரியத்தைப் பாது காப்பதற்கான ஒரு சட்டக் கட்டமைப்பை மாத்திரமே வழங்குகிறது.

நீதிபதி என்ற உயர் பதவியைப் பயன்படுத்தி எவரும் தங்களுக்குத் தோன்றியவாறு தன்னிச்சையாகச் செயல்பட முடியாது எனப் பிரதம நீதியரசர் இதன்போது வலியுறுத்தினார். பொதுமக்கள் நீதித்துறையின் மீது வைத்துள்ள நம்பிக் கையையும் நன்மதிப்பையும் எவ்வித களங்கமும் இன்றிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு நீதித்துறை அதிகாரி யினதும் முதற்பொறுப்பு என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (அ)

# வலி.வடக்கில் காணி விடுவிக்கக் கோரி உரிமையாளர்கள் நேற்றும் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 04

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள தங்களது காணிகளை விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் நேற்று 11ஆவது வாரமாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலிகாமம் வடக்கு பகுதியில் இராணுவத்தின் "அதிகாரிகள்" பங்களா முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், பல கிராமங்களைச் சேர்ந்த காணி உரிமையாளர்கள் கலந்துகொண்டனர். 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள், 1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தங்களது சொந்த நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்டதையடுத்து, அந்தப் பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்தன.

யுத்தம் நிறைவடைந்து 17 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், பாதுகாப்பு தரப்பினர் அப்பகுதிகளில் இருந்து முழுமையாக வெளியேறாத காரணத்தால், அப்பகுதிகள் இன்னமும் உயர் பாதுகாப்பு வலயமாகவே தொடர்கின்றன என போராட்டக் காரர்கள் சுட்டிக்காட்டினர்.

சுமார் 651 ஏக்கர் பரப்பளவிலான தங்களது பூர்வீகக் காணிகளை மீள ஒப்படைக்குமாறு பல ஆண்டுகளாக அரசிடம் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.




# சாலேயிடம் கடவுச்சொற்கள் கேட்பது மீண்டுமொரு பேரழிவை ஏற்படுத்தும்!

## உதய கம்மன்பில எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 04

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, தனது கைபேசி மற்றும் மடிக்கணினியின் கடவுச்சொற்களை விசாரணை அதிகாரிகளுக்கு வழங்குமாறு கட்டாயப்படுத்தக் கூடாது என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அதற்கான நான்கு முக்கிய காரணங்களையும் அவர் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், சுரேஷ் சாலேயுக்கு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை தாம் மதித்தாலும், அதனுடன் உடன்படவில்லை என்றும், அவரது சட்டத்தரணிகள் குழு இதற்கு எதிராக மேன்முறையீடு செய்யும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையின் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின்படி, தனக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு உதவுமாறு எந்தவொரு சந்தேகநபரையும் கட்டாயப்படுத்த முடியாது. சந்தேகநபர் ஒருவர் தனக்கு எதிரான விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டிய அவசியமில்லை என்பதுடன், அவர் விரும்பினால் மௌனமாக இருப்பதற்கான முழு உரிமை அவருக்கு உண்டு.

விசாரணை அதிகாரிகளோ அல்லது அரச பிரதிநிதிகளோ கடவுச்சொற்களை வழங்குமாறு சந்தேகநபர் மீது தேவையற்ற அழுத்தங்களையோ, அச்சுறுத்தல்களையோ அல்லது தூண்டுதல்களையோ பிரயோகிக்கக் கூடாது. அவ்வாறு செய்வது சட்டவிரோதமான செல்வாக்குச் செலுத்துகையாக மாறும். தற்போதைய அரச பிரதிநிதிகளின் பொதுவெளிக் கூற்றுகள் அத்தகைய அழுத்தங்களை உருவாக்குவதாக அமைந்துள்ளன.

சுரேஷ் சாலே தனது 38 ஆண்டு கால புலனாய்வுத் துறை சேவையில் உருவாக்கிய மிக உணர்வுபூர்வமான மற்றும் இரகசியமான தகவல் மூலங்கள் தொடர்பான விவரங்கள் அந்த மின்னணு சாதனங்களில் இருக்கலாம். தனிப்பட்ட நம்பிக்கை மற்றும் "ஹனி ட்ராப்ஸ்" உள்ளிட்ட பல்வேறு உத்திகள் மூலம் தகவல்களை வழங்கியவர்களின் விவரங்கள் இதில் அடங்கும். இந்தக் கடவுச்சொற்களை வெளிப்படுத்துவதன் மூலம், நாட்டின் பாதுகாப்புக்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைத்துத் தகவல் வழங்கியவர்களின் உயிருக்குக் கடுமையான அச்சுறுத்தல் ஏற்படும்.

கடந்த 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற "மில்லினியம் சிற்றி" விவகாரத்தின் போது, நாட்டின் இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் மற்றும் அதிகாரிகள் பற்றிய விவரங்கள் வெளியில் கசிந்ததால் ஏற்பட்ட கசப்பான விளைவுகளை நாடு அறிந்தது. இதனால் பல புலனாய்வு அதிகாரிகளும் தகவல் வழங்குநர்களும் படுகொலை செய்யப்பட்டதுடன், நாட்டின் ஒட்டுமொத்த புலனாய்வு வலையமைப்பும் சீர்குலைந்தது. அத்தகையதொரு ஆபத்தான நிலைமை மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாது.

இந்தக் காரணங்களின் அடிப்படையில், சுரேஷ் சாலே தனது கடவுச்சொற்களை வழங்குவதை எதிர்ப்பதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. எனினும் இந்த நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான சவால்கள் முறையான சட்டச் செயல்முறைகளின் ஊடாகவே முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# எஸ்.எம். சந்திரசேனவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு, ஜூலை. 04

ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையதாக கூறப்படும் முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது.

கையூட்டல் மற்றும் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்தக் குற்றப்பத்திரிகை, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் விதிகளின்படி வாசித்துக் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பிரதிவாதியான முன்னாள் அமைச்சரை 50,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிபதி அனுமதி வழங்கினார்.

அத்துடன், இந்த வழக்கினை எதிர் வரும் ஜூலை மாதம் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறும் அவர் உத்தரவிட் டார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள், அநுராதபுரம் மாவட்ட ஏழை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதற்காக அரசாங்கத்தின் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 36,000 கிலோ கிராம் சோள விதைகளை, அப்போதைய ஜனாதிபதித் தேர்தலின் போது அரசியல் லாபம் பெறும் நோக்கில் தனது அரசியல் ஆதரவாளர்களுக்குப் பகிர்ந்தளித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து, இந்த சோள விதைகளைத் தனது ஆதரவாளர்களுக்குப் பகிர்ந்தளித்ததன் மூலம், அவர் "ஊழல்" எனும் குற்றத்தைச் புரிந்துள்ளதாகக் குறிப்பிட்டு கையூட்டல் மற்றும் ஒழிப்பு ஆணைக்குழுவினால் இந்த வழக்கைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.